[1974 சனவரி 23

பலாப்பழ உற்பத்திக்குக் கடன்

* 110 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பலாப்பழங்களை உற்பத்தி செய்ய அரசு ஏதேனும் உதவி வழங்கி வருகின்றதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

தாசானிட் மீதான சுங்க வரி

* 111 வினா.—**திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாசானிட் இறக்குமதி மீதான சுங்க வரியை விலக்களிக்கும்படி மத்திய சர்க்காரை இவ்வரசு கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உருளைக் கிழங்கைத் தாக்குகிற பூச்சிகளை ஒழிக்க ஜெர்மனியிலிருந்து தாசானிட் என்ற இந்த மருந்து வரவழைக்கப்பட்டது. அந்த மருந்திற்கு விலை யில்லை. ஆனால் அதற்கு இறக்குமதி வரியாக 56,42,000 ரூபாய் மாநில அரசால் செலவிடப்பட்டது. அந்தப் பணத்தைத் திரும்பத் தந்துவிட வேண்டுமென்று மத்திய அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, இந்த தாசானிட்டுக்கு சுங்கவரி விதிக்கப்படுவதால் விவசாயிகளுக்கு வரிச் சுமை அதிகமாகிறது, ஏக்கருக்கு குறிப்பிட்ட தொகையை இதற்காக வசூலிக்கிறார்கள். இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு மீண்டும் இந்த அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி நானே நேரிலே கடிதம் எழுதியிருக்கிறேன், நேரில் பேசியும் இருக்கிறேன். அடுத்த தடவை நம்முடைய மாநிலத்திலிருந்து அமைச்சர்கள் செல்லும்பொழுது இதுபற்றி அங்கேயுள்ள விவசாயத் துறை அமைச்சரிடம் நேரில் வற்புறுத்திக் கேட்க

1974 சனவரி 23]

வேண்டுமென்றிருக்கிறோம். இந்த 56,42,000 ரூபாயை அவர்கள் திருப்பித் தந்தால் அதை எவ்வாறு விவசாயிகளுக்குச் சலுகைகளாகக் கொடுக்க முடியும் என்பது ஆராயப்படும்.

திரு. எம். தேவராசன் : கோல்டன் நெமோடோட் நோய் இந்த தாசானிட் மருந்தால் சரிசெய்யப்பட்டு வருகிறது. இதற்காக விவசாயிகளிடமிருந்து 100 ரூபாய் வீதம்தான் முன்னாலே வசூலிக்கப்பட்டது. இப்பொழுது 250 ரூபாயாக அதை ஆக்கியிருக்கிறார்கள். ஆதலால் விவசாயிகளுக்கு சிரமங்கள் இருக்கின்றன, எனவே பழையபடி இருந்த அந்த 100 ரூபாய் வீதமே 20 ஏக்கருக்கு வசூலிக்கச் செய்வதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நண்பர் அவர்கள் சொன்ன கருத்து ஆராயப்படும். நான் ஏற்கெனவே சொன்னபடி. இந்த மருந்து நாமாக வரவழைத்ததாக இருந்தாலும்கூட இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட் அடிப்படையிலே முற்றிலும் இனமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதற்கு வரி என்ற அளவிலே பெருத்த தொகையைக் கொடுக்கிறோம். 56,42,000 ரூபாய் என்று சொன்னேன். அதனால்தான் விவசாயிகளிடமிருந்து அதிகமாக வசூலிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை அமல் நடத்துவதினாலே அரசுக்கு எந்தவிதமான லாபமும் கிடையாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதுமை ஒதுக்கீடு

* **112 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் கோதுமையின் மாதாந்திர சராசரி அளவு எவ்வளவு ?

(இ) 1973 ஆம் ஆண்டில், முதல் நான்கு மாதங்களில் வந்து சேர்ந்த கோதுமையின் அளவு எவ்வளவு? மாதவாரியாக ?